பக்கங்கள்:-16

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 06 | வெள்ளிக்கிழமை | 19.04.2024 | அதிர்வு 262 |
| --- | --- | --- | --- | --- | --- |

## காசல்ரீ நீர்த்தேக்கத்தில் மூழ்கி மாணவன் மரணம்

(செ.தி.பெருமாள்)

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் மூழ்கி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் இந்த 06

# யாழில் சுண்ணக்கல்லைக் களவாக அகழ்ந்து நாள்தோறும் 10 – 15 லொறிகளில் திருமலைக்கு!

### அனுப்புகின்றனர் என சிறீதரன் எம்.பி. அதிர்ச்சிக் குற்றச்சாட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போதும் சுண்ணக்கல் தினசரி அகழப்பட்டு இரகசியமான முறையில் – திருட்டுத்தனமாக – திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படுவது பற்றிய அதிர்ச்சித் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்ற சமயமே இதனைச் சிறீதரன் எம்.பி. குறிப்பிட்டார்.

காங்கேசனதுறையில் இயங்கிய சீமெந்து ஆலைக்காகச் சுண்ணக்கல் அகழ்ந்த பிரதேசங்களான காங்கேசன்துறை, பலாலி தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாரிய இரு குழிகளும் இன்று வரை மூட முடியாமல் 06





# வாக்குச்சீட்டில் மொட்டுச் சின்னம் நிச்சயம் இருக்கும்!

### நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம் 'முரசு'க்கு அவரே தெரிவிப்பு

**'இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் வாக்குச் சீட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னம் நிச்சயம் இருக்கும். அதில் சந்தேகத்துக்கு இடமில்லை. யார் அந்தச் சின்னத்துக்குரிய வேட்பாளர் என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டும்."**

**– இவ்வாறு நேற்று 'காலைமுரசு'க்குத் தெரிவித்தார் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி.** 06

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய எவரும் தப்பவே முடியாது

### தேசிய மக்கள் சக்தியின் உறுதியுரை கையளிப்பு



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதியை ஈடேற்றுவதற்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதியுரை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நேற்று முற்பகல் 11 மணியளவில் பொரளையில் உள்ள பேராயரின் 06




நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அரசியலில் எதிர்காலம் நல்லதல்ல போலவே தெரிகின்றது. அவர் ஆரம்பித்திருக்கும் அரசியல் சூதாட்டம் அவரது காலையே வாரி விடும் என்பது போலவே தோன்றுகின்றது.

இன்றைய நிலையில் தெற்கில் பெரிதும் தள்ளாடும் தேசிய கட்சி எது என்று கேட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்று அரசியலில் அரிச்சுவடி படிக்காதவர் கூட கூறிவிடுவர்.

அந்தக் கட்சி குழப்பத்தின் உச்சியில் இருக்கின்றது. இந்தச் சமயத்தில் போய் அதனுடன் ஒட்டிக்கொண்டு புதுக்கதை விடுகின்றார் விஜயதாஸ ராஜபக்ஷ.

பெரிய கட்சிகள் எல்லாம் ஒரு 06




# அரச காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றும் செயற்பாடு வடக்கில் தற்காலிக இடைநிறுத்தம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் தகவல்

வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப்பத்திரங்களை கைமாற்றும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் தெரிவிப்பு.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம், இணைத் தலைவர்களான ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல், மீள் குடியேற்றம், புதிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் இதன்போது கருத்து தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் மீள் குடியேற்ற நடவடிக்கை நிறைவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி வழங்கியுள்ள பணிப்புரைக்கு அமைய, மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் 1,500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர் எனவும் அவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் விசேட கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கைமாற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஆளுநர் தெரிவித்தார்.

உறித்து' காணி உறுதிகளை வழங்கும் திட்ட நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதற்கமையை மே மாத நிறைவுக்குள் வடக்கு மாகாணத்தில் 60,000 பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இந்த திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங் கப்பட்டுள்ளன என ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ் மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறும் ஆளுநர் தெரிவித்தார். நிலக்கீழ் நீர் தொடர்பான ஆய்வுகள் உரியவாறு மேற்கொள்ளாது சில தனியார் நிறுவனங்கள் குழாய் கிணறுகளை அமைப்பதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஆளுநர், விதிமுறைகளை மீறும் நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நகர அபிவிருத்தி திட்டங்களின் போது பொதுமக்கள் இலகுவில் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார்.

ஒவ்வொரு துறைசார் திட்டங்களும் வலயங்களாக பிரிக்கப்பட்டு பொதுமக்கள் இலகுவில் அணுகக்கூடிய வகையில் மேம்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டினார்.









# மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் செயலகத்தில்!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் கடற்தொழில் அமைச்சரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்றது.

இன்று காலை9 மணியளவில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்ட சட்ட மற்றும் போக்குவரத்து ஒழுங்குகளை கவனித்தல், சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் போதைப் பாவனையை கட்டுப்படுத்தல், விவசாயம், காணி விடுவிப்பு, நீர்வளம், சமூக பாதுகாப்பு நலன்புரி விடயங்கள், சட்டவிரோத மதுபான விற்பனையைக் கட்டுப்படுத்தல், வீட்டுத்திட்டம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதி பெறும் செயற்திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.விகே. சிவஞானம், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.













# கசிப்பு பொதியிடலில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணத்தில் கசிப்பு விற்பனைக்காக அவற்றை சிறு சிறு பொதிகளாகப் பொதி செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவர் வீட்டில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வீட்டைப் பொலிஸார் சுற்றிவளைத்தபோது, வீட்டினுள் விற்பனைக்காகக் கசிப்பைச் சிறு சிறு பொதிகளாகப் பொதி செய்து கொண்டிருந்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணிடமிருந்து சுமார் 10 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# சு.கவின் உத்தியோகபூர்வமற்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்க

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

"ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். அதனை அடிப்படையாகக் கொண்டே அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்."

– ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராகவுள்ளார். சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ள சுதந்திர கட்சியின் அமைச்சர்களே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்திலிருந்து ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களாவர்.




எமது நல்லாட்சி அரசாங்கத்திலும் அவர்கள் அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளனர். இவர்கள் அண்மையில் அரசியல் குழு கூட்டத்தை நடத்தி புதிய நியமனங்களையும் வழங்கியுள்ளனர். இறுதியில் தற்போதைய ஜனாதிபதி சுதந்திர கட்சியின் தலைவரானதன் பின்னரே இந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும்."– என்றார்.

# நெடுந்தீவில் இடிந்து வீழ்ந்த நீர்த் தாங்கியை கட்டியவர் யார் எனத் தெரியாத அதிகாரிகள்!

(ந.லோகதயாளன்)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் இடிந்து வீழ்ந்த நீர்த் தாங்கியை அமைத்தவர்கள் யார் எனத் தெரியாத நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை அதிகாரியினால் மாவட்டச் செயலகத்தில் நகைப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்ற சமயம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுலா மையம் தொடர்பில் ஆராய்ந்தபோதே இவ்விடயம் இடம்பெற்றது.

"மண்டைதீவில் ஓர் சுற்றுலா மையம் அமைக்க முற்பட்டபோது அது வேண்டாம் எனத் தடுத்தோம். அதிகாரிகள் தாம் நினைத்த விடயத்தைச் செய்தே தீருவோம் என ஒற்றைக் காலில் நின்று நிறைவேற்றினர். ஆனாலும் எத்தனை மாதங்கள் அது இயங்கியது? அதனால் பலகோடி ரூபா நாசமாகியது" – என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியபோது அது எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா கோரினார்.

அது 2019இல் முன்மொழியப்பட்ட திட்டம் என்றபோது, "அது உங்கள் காலம் அல்லவா?" என அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை நோக்கி வினாவினார்.

"அப்போதே இந்த இடம் பொருத்தம்மற்றது. அதனால் இங்கே மேற்கொள்ள வேண்டாம் என நான் பல தடவை தடுத்தேன். அதிகாரிகள் கேட்கவில்லை." – என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பதிலளித்தமையோடு, "நெடுந்தீவில் நீங்கள் ஒரு நீர்த்தாங்கி கட்டினீர்களே அது என்ன நிலைமை?" – எனப் பதில் வினாத் தொடுத்தார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா "அது யாரால் கட்டப்பட்டது?" என வினாவினார்.

இதற்குப் பதிலளித்த நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை அதிகாரி "அது ஒப்பந்தகாரரினால் கட்டப்பட்டது" என பதிலளித்தபோது, மண்டபமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.

# பாடசாலை ஆரம்பம், முடிவு சமயத்தில் கனரக வாகனங்களுக்குக் கட்டுப்பாடு

(ந.லோகதயாளன், பிரபாகரன் டிலக்ஷன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலை ஆரம்பமாகும் மற்றும் நிறைவடையும் நேரத்தில் பாடசாலை வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் நிறைவடையும் நேரத்திலும் கனரக வாகனங்கள் பயணிக்கின்றமை தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

போட்டி போட்டு சாரதித்துவம் செய்யும் அரச மற்றும் தனியார் பேருந்துகளால் வீதியில் செல்லும் மக்கள் அதிக அசௌகரியங்களை சந்தித்து வருகின்றமையால் அது குறித்தும் இரு தரப்பினரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும்,

அத்துடன் இவ்வாறான சாரதிகளை அவதானித்தால்




சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதேநேரம் இவ்வாறான இரு அறிவுறுத்தல்கள் தொடர்பிலும் அசமந்தமாக செயற்படும் சாரதிகளை உரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் பொலிஸார் பணிக்கப்பட்டனர்.

# பொது மக்களின் கோரிக்கைக்கு அமைய முறைமை மாற்றத்தை ஏற்படுத்தினோம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



“மக்கள் வீதிக்கு இறங்கி மாற்றத்தை ஏற்படுத்தும்படி கூச்சலிட்டனர். அதற்கமைய கடந்த இரண்டு வருடங்களில் தேவையான கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.”

– இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முறைமை மாற்றத்தை கோரி சுமார் இரண்டு வருடங்களாக மக்கள் தெருக்களில் இறங்கி கூச்சலிட்டனர். ஆனால் ஒட்டுமொத்த மக்களும் இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என நினைத்தனர். ஆனால் மக்கள் அங்கு மனமாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. அதனால் தான் எங்களுக்கு தேசிய கொள்கைகள் தேவைப்பட்டன. யார் மாறினாலும் மாறாத திட்டத்தைத் தயாரிக்க விரும்பினோம். கடந்த இரண்டு வருடங்களில் எமது அமைச்சு அந்த வேலைத்திட்டத்தை சரியாகச் செய்துள்ளது.

நாங்கள் குடியகல்வு கொள்கையை உருவாக்கினோம். மேலும், தொழிலாளர் கொள்கை குறித்து மீண்டும் விவாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதற்கு தொடர்புடைய கொள்கையையும் அறிமுகப்படுத்தி. தொழிலாளர் சட்டத்தையும் மாற்றினோம். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தை மாற்றி கொள்கை மாற்றத்தை உருவாக்கவும் முடிந்தது.

அவ்வாறே எங்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தையும் தொழிலாளர் துறையையும் டிஜிட்டல் மயமாக்க முடிந்ததுள்ளது . வெள்ளையர்களின் காலத்தில் நினைத்துக்கூட பார்க்காத ஒவ்வொரு தொழிலாளிக்கும் கௌரவத்தை வழங்கும் கருசரு திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

எம்மால் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய மிக அடிப்படையான கொள்கை மாற்றத்தை உருவாக்க முடிந்தது. இதற்கு அமைச்சில் உள்ள அனைவரும் உறுதியாக இருந்தனர். இதுதான் உண்மையான போராட்டம். அதாவது அனைத்து அரசு ஊழியர்களும் ஒன்றிணைந்து கடுமையாக உழைத்து கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கடுமையாக உழைத்து நாட்டைக் கட்டியெழுப்புவது உண்மையான போராட்டம். பல வருடங்களாக செய்ய முடியாத காரியங்களை இந்த இரண்டு வருடங்களில் நாங்கள் செய்து முடித்துள்ளோம்.”– என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புறம் ஒதுக்கிவிட்ட நிலையில் நாதியற்றிருந்த மைத்திரிபால சிறிசேன சு.கவின் தலைவர் என்ற முறையில் தாமும் அரசியல் கூட்டு ஒன்றை ஏற்படுத்தி, அந்தக் கூட்டை ஜனாதிபதித் தேர்தலில் இறக்கி, தானும் இலங்கை அரசியலில் ஒரு தாதா தான் என்று காட்ட ஒரு படத்தில் வடிவேல் உண்மையான ரவுடிகளுடன் தானும் இடித்துப் பிடித்து பொலிஸ் ஜீப்பில் தொற்றி ஏறிக்கொண்டு 'நானும் ரவுடிதான்!', 'நானும் ரவுடிதான்!' என்று கோஷம் போடுவது போல) ஒரு முயற்சி எடுத்தார்.

மைத்திரி தனது தலைமையிலான கூட்டின் ஜனாதிபதி வேட்பாளராக களம் இறக்குவதற்கு விஜயதாஸவைத் தேடி பிடிக்க, அவரும் போய் மைத்திரிபால தலைமையில் சு.கவில் ஒட்டி, ஜனாதிபதி வேட்பாளராகும் கனவில் முழுமையாக மூழ்கி விட்டார்.

பாவம், அதற்கிடையில் மைத்திரியின் கட்சித் தலைமைப் பதவிக்கு, நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆப்பு இறங்கிவிட்டது நடுவழியில்.

ஆனால், ஆற்று வெள்ளத்தில் நீந்தித் தப்புவதற்கு அகப்பட்டது கரடி என்று தெரியாமல் அதை கட்டிப் பிடித்தவர், பின்னர் அதனிடம் மாட்டுப்பட்டு, தம்மை விடுவிக்க முடியாது தத்தளிப்பது போல, தெரியாமல் போய் சு.க்வுடன் ஒட்டிக் கொண்டு விட்ட விஜயதாஸ ராஜபக்ஷவும் அதை விட முடியாமல் துடிக்கின்றார்.

நேற்று முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் நினைவு நிகழ்வில் ஏனைய சு.க. தலைவர்களுடன் பங்கு பற்றிய விஜயதாஸ ராஜபக்ஷ 'சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்காத வரை நான் இறக்க மாட்டேன்' – என்று அங்கு சூளுரைத்திருக்கின்றார்.

தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க இருக்கையில், அதற்கிடையில் தனக்குக் கீழ் அமைச்சரவையில் இருக்கும் ஒருவர் தனக்கு எதிராக தேர்தலில் வேட்பாளராகக் குதிக்க முஸ்தீபு செய்வதா என்ற சீற்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தச் சீற்றத்தின் பின்புலத்தில் அடுத்து வரும் நாள்களில் – அல்லது விரைவில் – ஓர் அமைச்சரவை மாற்றம் ஏற்படும் எனக் கொழும்பு வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன.

பல்வேறு வழக்குகளில் சிக்கி இருக்கும் மைத்திரிபால சிறிசேனவுடன் இந்நேரம் பார்த்துப் போய் நீதி அமைச்சர் ஒட்டுவதா என்ற கோபத்தில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தச் சாட்டுடன் நீதி அமைச்சர் பதவியில் இருந்து விஜயதாஸ ராஜபக்ஷவை மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதிப் பதவி என்ற எட்டாக்கனிக்கு ஆசைப்படுகின்றார் விஜயதாஸ ராஜபக்ஷ. எட்டாததற்கும் ஆசைப்படுவது தானே அரசியல்...! ஆனால், அதனால் கையில் இருக்கும் நீதி அமைச்சர் பதவியையும் அவர் கோட்டை விடப்போவது தான் பரிதாபம்...!

\+ \+ \+

எனது 'என்வலப்' தகவல் சரியான சூடு கிளப்பியிருக்கின்றது. அளவான தொப்பியை தாமே தேடித் தம் தலையில் போட்டுக் கொண்டவர்கள் சூடு தாங்க முடியாமல் குத்தி முறிகின்றனர். அதற்காக என்னை வசை பாடுவதற்காகப் பத்தும் பலதும் எழுதித் தள்ளுகிறார்கள். நல்லது. எல்லாம் பதிவுகளில் வரட்டும். ஆவணங்களாகட்டும். சட்ட, நீதி மட்டங்களில் கையாளப்பட வேண்டிய விடயங்களும் தாராளம். ஆலோசனை கலந்துதான் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். எழுத்தால் விடயங்களைப் பழுதாக்கி விடக்கூடாது. பார்த்திருக்கிறேன். வரட்டும்.

அதனால் இப்போதைக்கு நோ கமெண்ட்ஸ்...!

# பொது வேட்பாளராகக் களமிறங்குமாறு விஜயதாஸவிடம் சு.க. கோரவில்லையாம்

## திலங்க சுமதிபால கூறுகின்றார்



ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கவில்லை என்று அக்கட்சியின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அவ்வாறானதொரு திட்டம் இல்லை. அது பற்றி கோரிக்கை விடுக்கப்படவும் இல்லை. விஜயதாஸ ராஜபக்ஷ அரசு பக்கமே உள்ளார். ஆளுங்கட்சி பக்கம் உள்ளவர்களுடன் கொடுக்கல் – வாங்கல் கிடையாது." – என்றும் திலங்க சுமதிபால மேலும் குறிப்பிட்டார்.

## வாக்குச் சீட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"அப்படியாயின், ரணில் விக்கிரமசிங்க மொட்டுச் சின்னத்தில் – பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கூறுகின்றீர்களா?" எனக் கேட்டதற்கு,

"எமது கட்சி முன்நிறுத்தப் பரிசீலிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர். அவரோ அல்லது வேறு எவரோ ஒருவர் நிச்சயம் மொட்டுக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை போட்டியிடுவார் என்பது உறுதி. எமது கட்சி நிச்சயம் களமிறங்கும். ஆனால் வேட்பாளர் யார் என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டும். கட்சி உரிய சமயத்தில் அதைத் தீர்மானித்து அறிவிக்கும்."– என்றார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

## காசல்ரீ நீர்த்தேக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

தனது உறவினர்களுடன் நீராடச் சென்றிருந்த வேளையிலேயே மேற்படி மாணவன் நீரில் மூழ்கியுள்ளார்.

நோர்வூட் கல்லூரியில் கல்வி பயிலும் காசல்ரீ தோட்டத்தைச் சேர்ந்த டயஸ் பெர்னான்டோ கிளின்டன் எனும் 17 வயதுடைய மாணவனே உயிரிழந்தவராவார்.

ச டலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நோட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழில் சுண்ணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஆபத்தான நிலையில் குடிமனைகளின் நடுவே உள்ளன.

இந்தநிலையில், தற்போது புத்தூர், மாதகல் – இளவாளைப் பகுதிகளில் சிலர் இரகசியமான முறைகளில் சுண்ணக் கல்லை அகழ்ந்து மூடிய பார ஊர்திகளில் எடுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு மூடிய பார ஊர்திகளில் தினமும்10 முதல் 15 வரையான பார ஊர்திகளில் (கெண்டெயினர்களில்) கற்கள் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு எந்தத் திணைக்களமாவது அனுமதி வழங்கியதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த புவிச் சரிதவியல் திணைக்களத்தைச் சேர்ந்த மயூரன் அவ்வாறான எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

## உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லத்தில் வைத்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களால் கையளிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், அந்தத் தாக்குதலால் நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகத் தேசிய மக்கள் சக்தியின் அரசு முறையாக சட்டத்தை அமுல்படுத்தும் எனவும், மேற்படி தாக்குதலுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்ட நபர்களுக்கு எதிராக முறைப்படி சட்டத்தை அமுலாக்கும் எனவும் வலியுறுத்தும் 7 விடயங்கள் அந்த உறுதியுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்து பேராசிரியர் கிறிசாந்த அபேசிங்க, சட்டத்தரணி சுனில் வட்டகல, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும, சிரேஷ்ட பேச்சாளர் ரொஹான் பெர்னாண்டோ, அருண சாந்த நோனிஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.





# அன்னை பூபதியின் ஊர்திக்கு களுவாஞ்சிகுடியில் அஞ்சலி!

(வவுணதீவு நிருபர்)

தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தி மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு அவரது உருவப்படம் தாங்கிய ஊர்த்தி நேற்று வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி நகரை வந்தடைந்தது. இந்நிலையில் உயிர்நீர்த்த தியாகதீபம் அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு அப்பகுதி மக்கள் சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

அன்னையின் உருவப்படம் தாங்கிய ஊர்தி யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகியிருந்தது. இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.



தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஏற்பாட்டில் இவ்வூர்தி பவனி இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக அன்னை பூபதி 1988 மார்ச் 19ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து 1988 ஏப்ரல் 19ஆம் திகதி உயிர் துறந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அமரர் பாலித தேவப்பெருமாவுக்கு வவுனியாவில் இளைஞர்கள் அஞ்சலி

(கே.வசந்தன்)

மின்சாரம் தாக்கி மரணமடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவப்பெருமவுக்கு மூவின இளைஞர்களும் இணைந்து வவுனியாவில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

வவுனியா, கந்தசாமி கோவில் வீதியில் இன்று இந்நிகழ்வு இடம்பெற்றது. கொவிட் பெருந்தொற்று காலத்திலும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நேரத்தில் இன, மதங்களைக் கடந்து முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவப்பொருமா பணியாறி இருந்தார்.

இதனால் மக்கள் மனங்களில் அவர் சிறந்த அரசியல் வாதியாக இடம்பிடித்திருந்த நிலையில் மின்சாரம் தாக்கி மரணமடைந்திருந்தார்.வவுனியா இளைஞர்களும் அவரது படத்திற்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் தமிழ், சிங்கள், முஸ்லிம் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.














நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் நிச்சயம் நடக்கும்

"நாட்டின் அரசியல் நிலைமை போகின்ற போக்கில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா? அல்லது தேர்தலை நடத்தாமல் பதவியில் நீடிக்க ரணில் விக்கிரமசிங்க வியூகம் வகுக்கின்றாரா?

- இப்படி எல்லாம் பலரும் சந்தேகம் தெரிவிக்கின்றனர் என ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்புகின்றார்.

உண்மைதான். அப்படி ஒரு சந்தேகம் பலருக்கும் இருப்பது வாஸ்தவம்தான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த கால அணுகுமுறைகள், நரித் தந்திரச் செயற்பாடுகள் போன்றவை அத்தகைய சந்தேகத்தை மக்கள் மத்தியில் இயல்பாகவே தோற்றுவிப்பதில் ஆச்சரியம் இல்லை.

நடைபெறவிருந்த இரண்டு மாகாண சபைகளின் தேர்தல்களை எதிர்கொள்ள அஞ்சி, மாகாண சபை தேர்தல் முறைமையையே இல்லாதொழித்த பிரகிருதி அப்போது பிரதமராக இருந்த இந்த ரணில் விக்கிரமசிங்கதான்.

உள்ளூராட்சித்தேர்தலைநடத்தும்பொறுப்பும் அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்குரியது. அந்த சுயாதீனத்தில் யாரும் தலையிடக் கூடாது, தலையிட முடியாது என அரசமைப்பு ஏற்பாடுகள் திட்டவட்டமாக வரையறை செய்திருக்க -

அத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு பகுதி வாக்குச்சீட்டுகளும் அச்சிட்டு தேர்தல் திகதிகளும் அறிவிக்கப்பட்ட பின்னர் -

அரசமைப்பு விதிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, இது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் நீதி நிர்வாகப் பிரயோகத்தையும் தந்திரமாக முடக்கி, அந்தத் தேர்தலை நடத்தாமல் செய்தவர் நிதியமைச்சராகவும் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வாகன இறக்குமதிகளுக்கு மீள அனுமதி வழங்குவது குறித்து ஆலோசிக்கும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டிருப்பதாக ஒருபுறம் கருத்து தெரிவித்துக் கொண்டு, மறுபுறம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு எஞ்சிய நிதியை ஒதுக்க இயலாது என்று தந்திரம் காட்டும் அரசியல்வாதி அவர்தான். அவரால்தான் அத்தகைய சகுனித்தனத்தை கனகச்சிதமாக முன்னெடுக்க முடியும்.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான காலக்கெடுவுக்கு இன்னும் 5 மாதங்களும் கொஞ்ச நாட்களுமே உள்ளன.

தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் நீடிக்கும் நப்பாசையில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவால் இன்னமுமே தாம் அந்தத் தேர்தலில் போட்டியிட உள்ளார் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க முடியவில்லை. அத்தகைய இக்கட்டில் அவர் சிக்கி இருக்கின்றார்.

எந்த அணியில், எந்தக் கட்சியில், யாருடன் கூட்டுச் சேர்ந்து களம் இறங்குவது என்ற குழப்பத்தில் ரணில் திண்டாடுகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரியும் விவகாரம்.

இக்குழப்பத்தின் காரணமாக ஏற்கனவே பல தேர்தல்களை வெற்றிகரமாக முடக்கிய அனுபவம் கொண்ட ரணில் விக்கிரமசிங்க இந்த ஜனாதிபதித் தேர்தலையும் முடக்கி விட்டுத் தாமே பதவியில் தொடர்வதற்கான வியூகம் எதையாவது வகுக்கின்றாரா என்று சந்தேகம் எழுகின்றது. அது நியாயமானதுதான்.

ஆனால், மாகாண சபைத் தேர்தல்களை நிரந்தரமாக முடக்கியமையைப் போன்று - உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த விடாமல் தடுத்தமை போன்று - ஜனாதிபதித் தேர்தலுடன் அவ்வளவு சுலபமாக விளையாட முடியாது. ரணில் விக்கிரமசிங்க அல்ல, வேறு யாராலும் கூட அப்படி எண்ணிப் பார்க்கவே இயலாது. அதுதான் நிலைமை.

69 லட்சம் வாக்குகளைப் பெற்று, அமோக வெற்றியீட்டி, அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதியை - அவரது கையை மேலும் பலப்படுத்துவது போல அவர் தரப்புக்கு அடுத்த ஆறு மாதத்தில் வந்த பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற ஆசனங்கள் வழங்கி அவரை மேலும் ஸ்திரப்படுத்தி விட்டு, அந்த மிகப் பலமான நிலையில் இருந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதியை - அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டை விட்டு ஓட ஓட விரட்டிய மக்கள் இந்த இலங்கை நாட்டின் வாக்காளர்கள் என்பது சுமார் 50 ஆண்டுகால அரசியல்வாதியான ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்கு தெரியும்.

அதனால், ஜனாதிபதித் தேர்தல் நடத்தும் விடயத்தில் அவர் தமது கைவரிசையைக் காட்டுவது துர்லபமே. அந்தத் தேர்தல் நடந்தே தீரும் என்பதுதான் தவிர்க்க முடியாத கட்டாயம்.

# இந்திய மக்களவைத் தேர்தல்: இன்று முதற்கட்ட வாக்குப்பதிவு




இந்திய மக்களவைத் தேர்தலின் முதற்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறவுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்காக தனியார் நிறுவனங்கள் அனைத்தும் ஊழியர்களுக்கும் இன்று விடுமுறை வழங்க வேண்டும் என இந்திய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தலில் வாக்களிக்க தத்தமது சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களுக்காக நேற்று முன்தினம் மற்றும் நேற்றும் விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ரயில், பஸ் நிலையங்களில் மக்கள் முண்டியடிப்பதைக் காணக்கூடியதாகவிருந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய மக்களவைத் தேர்தல் 28 மாநிலங்களிலும், 8 யூனியன் பிரதேசங்களிலும் 7 கட்டங்களாக நடைபெறவுள்ளது.

இன்று 19 ஆம் திகதி முதற்கட்ட தேர்தலும், ஜ"ன் மாதம் முதலாம் திகதி 7ஆம் கட்ட தேர்தலும் நடைபெறவுள்ளது.

வாக்கெண்ணும் பணிகள் ஜ"ன் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அன்றைய தினமே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இன்று ஆரம்பிக்கும் முதற்கட்டத் தேர்தல் 17 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களிலுள்ள 102 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு, அருணாச்சலப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஷ்கர், மத்திய பிரதேசம், மகாராஷ்ட்ரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரப் பிரதேசம் , உத்தராகண்ட், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களிலேயே இன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

அத்துடன் புதுச்சேரி, அந்தமான், நிக்கோபார், ஜம்மு - காஷ்மீர், இலட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் இன்று முதற்கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

2024 மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் சுமார் 6 கோடியே 23 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்காக தமிழகத்தில் 44 ஆயிரத்து 800 வாக்களிப்பு நிலையங்கள் கெமரா மூலம் கண்காணிக்கப்படவுள்ளன என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

# ஒரு புரட்சியை ஏற்படுத்துங்கள் தேர்தல்கள் ஆணையர் அழைப்பு



"இந்திய ஜனநாயகத்தின் மிகவும் அழகான அனுபவம் தேர்தல். அதில் வாக்களிப்பது போல எதுவுமே இல்லை. ஒவ்வொரு வாக்கும் முக்கியம். "

– இவ்வாறு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் 2024 இன் முதல்கட்ட வாக்குப்பதிவு இன்று தொடங்க இருக்கிறது. அதனை முன்னிட்டு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் வாக்காளர்களுக்கு ஒரு காணொலி செய்தியை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்

"நமது மகத்தான ஜனநாயகத்தில் தேர்தல் என்பது உங்களுக்கு சொந்தமானது. தேர்வும் உங்களுக்குச் சொந்தமானது. நீங்களே அரசாங்கத்தை தீர்மானிக்கிறீர்கள். இதனை நீங்கள், உங்களின் நலனுக்காக செய்கிறீர்கள். உங்களின் குடும்பத்துக்காக, உங்கள் குழந்தைக்காக, உங்களின் கிராமத்துக்காக, நகரத்துக்காக, இந்த நாட்டுக்காகச் செய்கிறீர்கள்.

இந்திய ஜனநாயகத்தின் மிகவும் அழகான அனுபவம் தேர்தல். அதில் வாக்களிப்பது போல எதுவுமே இல்லை. தேர்தலில் பங்கேற்பதில் ஒரு புரட்சியை ஏற்படுத்துமாறு நான் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். உங்கள் ஒரு வாக்கின் முக்கியத்துவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. ஒரு முக்கியமான போட்டியில் ஒரு வாக்கு எவ்வளவு முக்கியமான என்ற பல நிகழ்வுகளை நாம் பார்த்துள்ளோம்.

வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லும்போது வெப்ப அலைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கட்டாயம் கடைபிடியுங்கள். என்றாலும் இந்திய வாக்காளர்களின் உந்துசக்தி கோடை வெப்பத்தைத் தோற்கடிக்கும் என்பது எனக்குத் தெரியும்." - என்றார்.

# இந்தோனேசியா எரிமலை வெடிப்பு; சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது



இந்தோனேசியாவின் சுலவெசி தீவில் எரிமலை ஒன்று பலமுறை வெடித்ததைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து, ஆபத்தான பகுதிகளில் இருந்து சுமார் 11 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இரண்டு நாள்களுக்கு முன்பு சுலவெசி தீவில் உள்ள டானா டோராஜா என்ற இடத்தில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 18 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், சுலவெசி தீவில் உள்ள சுரயபெ என்ற எரிமலை 5 முறை வெடித்துச் சிதறியதாக இந்தோனேசியாவின் எரிமலை மற்றும் புவியியல் பேரிடர் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான அடி உயரத்திற்கு சாம்பல் படிந்திருக்கிறது. 2,378 அடி உயரமுள்ள Ruang எரிமலையில் இருந்து குறைந்தது 6 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் செல்லுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.


மேலும், எரிமலையின் ஒரு பகுதி கடலில் சரிந்து சுனாமியை ஏற்படுத்தக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் அனக் க்ரகடாவ் எரிமலை வெடிப்பால் சுமத்ரா மற்றும் ஜாவா கடற்கரையில் சுனாமி ஏற்பட்டது. அதன் பின் மலையின் சில பகுதிகள் கடலில் வீழ்ந்து 430 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்தோனேஷிய விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கங்களால் டெக்டானிக் அடுக்குகளில் ஏற்பட்ட தாக்கமே இந்த எரிமலை வெடிப்பிற்கு காரணம் என இந்தோனேசியாவின் எரிமலை மற்றும் புவியியல் பேரிடர் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேலுடனான ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த 28 ஊழியர்களை பணி நீக்கம் செய்த கூகுள் நிறுவனம்




இஸ்ரேலுடனான Cloud Computing மற்றும் செயற்கை நுண்ணறிவு சேவை ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட 28 ஊழியர்களை கூகுள் நிறுவனம் பணி நீக்கம் செய்துள்ளது.

இது போன்ற ஆர்ப்பாட்டங்களுக்கு தமது நிறுவனத்தில் இடமில்லை எனவும் இதனை பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் கூகுள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

Project Nimbus என்று அழைக்கப்படும் மேற்படி ஒப்பந்தத்தை எதிர்த்து 28 ஊழியர்கள், நியூயோர்க் மற்றும் சன்னிவேல் அலுவலங்களில் சுமார் 8 மணி நேரத்திற்கும் மேலாக உள்ளிருப்புப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

Google Cloud CEO தாமஸ் குரியனின் அலுவலகத்தை விட்டு அகல மறுத்த ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கூகுள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து கூகுள் நிறுவனம் போராட்டம் நடத்திய 28 ஊழியர்களையும் பணி நீக்கம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

# இறையாண்மை பத்திர உரிமையாளர்களுடனான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

இலங்கை மற்றும் இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இருதரப்பினருக்கு இடையில் கொள்கையளவிலான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் உத்தியோகபூர்வ மதிப்பீட்டை முன்வைக்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் செயற்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்துடன் இணங்கும் வகையில், இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு தொடர்பில் இருதரப்பினருக்கிடையிலும் இணக்கப்பாடு எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி ரொயிட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

12.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மைப் பத்திரங்களை மறுசீரமைப்பதற்கு இதுவரை இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என நிதியமைச்சு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையின் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மைப் பத்திரங்களை, மே மாத நடுப்பகுதியளவில் மறுசீரமைப்பதற்கான இயலுமை கிடைக்கும் என, இறையாண்மை பத்திர உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பான Standard Chartered ஆய்வு நிறுவனத்தை மேற்கோள் காட்டி Bloomberg இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடன் வழங்குநர்கள் முன்வைத்துள்ள ஆஉைசழ டுைமெ டீழனெ முறைமையே, இறையாண்மை பத்திர மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான பிரதான தடையாகக் காணப்படுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறைக்கமைய, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார முன்னேற்றங்களின் அடிப்படையில், இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கான நன்மைகள் தீர்மானிக்கப்படும்.

எவ்வாறாயினும், இணக்கப்பாடு தாமதமடைவதனூடாக இந்தக் கலந்துரையாடல், இந்த ஆண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை காலதாமதமடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு தொடர்பிலான இணக்கப்பாட்டை விரைவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# வரி வருவாய அதிகரிப்பதில் அரசு வெற்றியடைந்துள்ளது

## செஹான் சேமசிங்க கூறுகிறார்



"விரிவான நிதி சீர்திருத்தங்களை அடுத்து வரி வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் வெற்றியடைந்துள்ளது. இது கடன் மறுசீரமைப்புக்கான முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்." – இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேர்காணல் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"2023ஆம் ஆண்டு அரசாங்கத்தின் வருவாய் 8.1 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையை 12 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

கடன் வழங்குநர்களுடன் கொள்கையளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது." – என்றார்.

# போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பிலிருந்த 2 பொலிஸார் கைது

போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பில் இருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவத்தகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் மற்றும் தொருட்டியாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. அதேவேளை, இந்த போதைபொருள் கடத்தல்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# 11,000 இற்கும் மேற்பட்டோர் வறட்சியின் பிடியில் பாதிப்பு!

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் 3 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 413 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 487 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 461 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், வறட்சியான காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 813 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 949 பேரும், பதுளை மாவட்டத்தில் 190 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மியன்மாரில் சிக்கிய இலங்கையர் 8 பேர் நாட்டிற்கு வருகை தந்தனர்

மியன்மாரில் மியாவாடி இணையக் குற்றப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட 08 இலங்கையர்களும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

தாய்லாந்தில் இருந்து நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த, யு.எல். 403 என்ற விமானத்தில் இவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் 06 ஆண்களும் 02 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி மியன்மாரில் மியாவாடி இணையக் குற்றப்பகுதியில், பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 08 இலங்கையர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை மியன்மார் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி 08 பேரையும் இலங்கைக்கு அனுப்பும் நோக்கில் மியாவாடி மத்திய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 11ஆம் திகதி மியன்மாரில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் அந்நாட்டு அதிகாரிகள் அவர்களை தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் கைது!

கடை ஒன்றில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு உதவியவர்கள் என்று கூறப்படும் சந்தேகநபர்கள் மூவரை பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கடந்த மார்ச் 11 ஆம் திகதி பிடிகல, நியாகம பிரதேசத்தில் கடை ஒன்றில் வைத்து துப்பாக்கிச் சூடு மற்றும் சாரதியை ஏற்றிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



இவர்கள் மூவரும் ‘கரந்தெனிய சுத்தா’ மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான சமன் கொல்லா ஆகியோரின் நெருங்கிய சகாக்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 22, 24 மற்றும் 31 வயதுடைய கஹதுவ, உனன்பிட்டிய மற்றும் தவலம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், பிடிகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஓமான் வளைகுடாவில் மூழ்கிய கப்பலில் மீட்கப்பட்ட இலங்கையருக்குச் சிகிச்சை

ஓமான் வளைகுடாவில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்த இலங் கையர்களில் ஐவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் நிலைமை கவலைக்கிட மாக இல்லை என ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.கப்பலிலிருந்து மீட்கப்பட்ட மற்றை யவர்கள் நலமாக உள்ளனர் என சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

ஓமான் வளைகுடாவில் ஏற்பட்ட புயலில் சிக்கி விபத்திற்குள்ளான கப்பலில் இருந்த 21 இலங்கைப்ப ணி யாளர்கள் ஈரான் அவசர படையினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர்.

குக் தீவுகளின் கொடியுடன் எண் ணெய் ஏற்றிச்சென்ற கப்பல், ஈரானின் தெற்கு நகரமான ஜாஸ்கில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் ஆழத்தில் கவிழ்ந்துள்ளதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சர்வதேச தரத்திலான விளையாட்டரங்கு செம்மணியில் அல்ல; மண்டைதீவில்தான்

## அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் விடாப்பிடி

(ந.லோகதயாளன்)

சர்வதேச தரத்திலான விளையாட்ட ரங்கு ஒன்றை நகர அபிவிருத்தி அதிகார சபை செம்மணியில் நிறுவ முயல் கின்றது. ஆனால் இதனைத் தீவகத்தில் நிறுவி அப் பகுதியையும் அபிவிருத்தி கண்ட பகுதியாக மாற்ற வேண்டும் என வடக்கு மாகாண சபை யின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஆகி யோர் தலைமையில் நேற்று இடம்பெற்ற சமயமே இவ்வாறு தெரிவித்ரார்.

நான்கு ஒருங்கிணைப்புக் குழுக்



கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுவரும் இந்த விளையாட்டு வளாகத்தை செம்ம ணியில் முன்னர் உப்பளம் அமைந்த பகுதியில் அமைக்க எடுக்கும் முயற் சியை கைவிட வேண்டும். ஏனெனில் குடாநாட்டிற்கான நண்ணீர்த் திட்டம் இப் பகுதியின் ஊடாகவே மேற்கொள் ளப்படும் சமயம் பாரிய கட்டடங்கள் வரும்போது அவை தடையாக அமையும்.

மழை காலத்தில் நீர் ஓட்டம் தடைப் பட்டு வயல் நிலங்கள் அழிவடையும். நகரின் மத்திக்கான நுழைவாயிலில் இது பொருத்தமற்ற திட்டம்.

இதேநேரம் மண்டைதீவில் இலங்கை வானொலிக்கு வழங்கிய 100 ஏக்கரில் இருந்து 30 ஏக்கரை வழங்குவதனால் தீவுப் பகுதிக்கு மைதானம் அமைப்பதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற இது பொருத்தமான இடமாக அமையும். அங்கே அமைப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் ஏற்றுக்கொள் கின்றமையால் தீவகத்தில் இந்த விளையாட்டரங்கை அமைப்பதனையே கண்டிப்பாக பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு மாற்றுப் பரிசீலனையை அதிகாரிகள் ஏன் மறுக்கின்றனர் எனப் புரியவில்லை. – என்றார்.

# இளநீர் செய்கையை அதிகரிக்க நடவடிக்கை

சர்வதேச சந்தையில் காணப்படும் கேள்விக்கு அமைய இளநீர் செய் கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 85 இளநீர் உற்பத்தி கிராமங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, புதிய இளநீர் வகைகளை செய்கை யாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களுக்கான ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். கொடுப்பனவு!

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு செலுத்தப்படாதுள்ள ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் உயர் அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைய, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிலுவைக் கட்டணமாகவுள்ள 500 கோடி ரூபாவிற்கும் அதிக தொகை செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சட்ட உரிமைகளை பாதுகாக்கும் வகையில், பெருந்தோட்ட யாக்க மறுசீரமைப்பும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு செலுத்தப்படாதுள்ள ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். கொடுப்பனவுகள் தொடர்பில் ஊழியர்களால் சுமார் 2000 இற்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என தேசியப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# திருத்தப்பட்ட மின்சாரச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது

உத்தேச மின்சாரத்துறை மறுசீரமைப்பு, இலங்கை மின்சார சட்டமூலமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சட்டமூலம் அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.கடந்த ஜனவரி மாதம் பங்குதாரர்களால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களும் இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சரின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து 2 வாரங்களுக்கு, அதன் சட்டபூர்வமான தன் மையை பொதுமக்கள் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 15 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை செய்கை

எதிர்வரும் சிறுபோகத்தை அடிப் படையாகக் கொண்டு வறண்ட வலயத் தில் 15 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கூடிய விளைச்சலைத் தரக்கூடிய நிலக்கடலை விதைகளை பயன்படுத்த விவசாயத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறைந்த நீர்ப்பாசன வசதிகளை கொண்ட வயல்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், அதற்காக விவசாயிகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.04.2024



## மேஷம்

இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் இன்று சற்று கடினமாக இருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் சில மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவு ஏற்படும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள சிறய அளவிலான கடன் பெறுவீர்கள். இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல.

தேவையற்ற மனக் கவலைகள் காரணமாக நீங்கள் தலைவலிக்கு ஆளாக நேரலாம்.



## ரிஷபம்

இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்றைய செயலகளை கவனமாக கையாளவும். எந்தச் செயல் செய்தாலும் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும்.

இன்று அவ்வளவு சிறப்பாக இருக் காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் சிறிது பதட்டம் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப் படும். அதற்கேற்றவாறு நடந்து கொண்டு ஒற்றுமையாய் இருங்கள்.

ஆன்மீக பயணங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.



## மிதுனம்

உங்கள் பணிகளை எளிதாகச் செய்வீர்கள். இன்று நன்மைகள் ஏற்படும். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள்.

பணியிடத்தில் அனைத்தும் சுமூக மாக இருக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் வெற்றி கிடைக்கும். திருப்திகரமான நிலை இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பிற்கு எடுத்துக்காட்டாய் விளங்குவீர்கள். உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## கடகம்

உங்கள் செயல்களை புத்திசாலித்தனத் துடன் செய்ய வேண்டும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் சிறிது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் செய்யுன் செயலில் கூடுதல் முயற்சி தேவை.

பணிகள் அதிகமாக காணப்படும். தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணிகளை கையாளவும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி காண்பீர்கள். இன்று சிறிது நேரம் உங்கள் பிரியமானவரோடு பேசுவதை தவிர்க்கவும். அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். திட்டமிட்டு பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

பதற்றம் காரணமாகத் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.



## சிம்மம்

உங்கள் மனது ஆன்மீக ஈடுபாடு கொண்டிருக்கும். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தடைகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது. புரிந்துணர்வின் குறைபாடு காரணமாக உங்கள் துணையிடம் வாக்குவாதம் செய்வீர்கள். நல்ல புரிந்துணர்வை வளர்க்க அவர் உணர் வுக்கும் இடம் கொடுங்கள்.

பணத்துக்கான அதிர்ஷ்டம் குறைவு. இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும்.



## கன்னி

இன்று சில தடைகள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். சுமுகமான பலன்கள் கிடைக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் அனைத்தும் சிறப்புடன் நடக்கும்.

நிதிநிலைமை இறுக்கமாக காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். அஜீரணக் கோளாறு காணப்படும். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



## துலாம்

இன்று சிறந்த நாளாக இருக்கும். உங்கள் செயலில் வளர்ச்சியும் வெற்றி யும் பெறுவீர்கள். உங்கள் விருப் பங்கள் இன்று நிறைவேறும்.

உங்கள் பணிகள் இன்று சுமுகமாக நடக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும். அதனை உங்கள் நலனுக்கு பயன்படுத்தலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியான வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளும் மனநிலையில் இருப்பீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதியதாக இருக்கும். அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும். இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## விருச்சிகம்

இன்று சிறப்பான வெற்றி காணப் படும். உங்களின் அனுசரனையான வார்த்தைகளின் மூலம் பிறரை கவர்வீர்கள். உங்களிடம் காணப்படும் வெற்றி காரணமாக நீங்கள் உச்சத் துக்குச் செல்வீர்கள்.

பணியிடத்து சவால்களை எளிதாக சமாளிப்பீர்கள். உங்கள் பணிகளை செய்யும்போது அனுசரித்து நடந்துகொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். நல்ல பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.04.2024




ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டவர்களாக இருப்பீர்கள். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும். உங்கள் எண்ணங்களில் தெளிவு காணப்படும்.

பணியிடத்தில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் கவனமாகப் பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்லுறவைப் பேண இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு மிதமாக காணப்படும். இன்று சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உங்கள் முகத்தில் முகப்பரு வர வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் கடின முயற்சியால் வளர்ந்து வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பணியில் புதிய கருத்துக்களை கொணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் உங்கள் பிரியமானவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

இன்று நிதிவளர்ச்சி கானப்படுகின்றது. உங்கள் சேமிப்பை உயர்த்த முடியும், பண இருப்பை நன்கு பராமரிக்க முடியும்.

நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனமாய் இருக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டாம். அது உங்கள் விருப்பத்தை அடைவதில் தடை ஏற்படுத்தும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. தவர்கள் நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். தகவால் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை.

பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும். பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். இதனால் தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




ஆரம்பத்தில் சில தடைகளை சந்தித்த பின்னர் உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளை நீங்கள் நல்ல விதத்தில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளின் மூலம் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

துணையிடம் நேர்மறையான எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

தியானம் அல்லது பிரார்த்தனை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park